இந்திய உயர் ஸ்தானிகராலயம்
கொழும்பு
************

<u>ஊடக அறிக்கை</u>

**கைத்தொழில் வர்த்தக அமைச்சர் மற்றும் இந்திய உயர் ஸ்தானிகர் இணைந்து அங்குரார்ப்பணம் செய்துவைத்த LANKAPAK 2019**
**********************************************************

கைத்தொழில், வர்த்தக அலுவல்கள், நீண்டகாலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம், கூட்டுறவுத்துறை அபிவிருத்தி, தொழில் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சர் கௌரவ றிசாட் பதியுதீன் மற்றும் இந்திய உயர் ஸ்தானிகர் தரண்ஜித் சிங் சந்து ஆகியோர் இணைந்து LANKAPAK 2019 கண்காட்சியை இன்று பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் திறந்து வைத்தனர். கைத்தொழில், வர்த்தக அலுவல்கள், நீண்டகாலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம், கூட்டுறவுத்துறை அபிவிருத்தி, தொழில் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் கௌரவ  புத்திக பத்திறணவும் இந்த நிகழ்வில் பங்கேற்றிருந்தார்.

இலங்கை பொதியிடல் நிறுவன தலைவர் திரு. அநுராத ஜயசிங்ஹே, ஆசிய பொதியிடல் சம்மேளன தலைவர் திரு. ரொஹான் விக்டோரியா,  சி.டி.சி இவென்ட்ஸ் ( தனியார்- வரையறுக்கப்பட்டது) நிறுவன முகாமைத்துவப் பணிப்பாளர் திரு. இம்ரான் ஹசன் மற்றும் இந்திய தொழில் துறை & பி.எச்.டி சேம்பர் ஒப் கொமர்ஸ் நிறுவன செயலாளர் திரு. ராகேஷ் சாரங்கி உள்ளிட்ட பிரமுகர்கள் ஆரம்ப நிகழ்வுகளில் பங்கேற்றிருந்தனர்.  இந்திய தொழில் துறை & பி.எச்.டி சேம்பர் ஒப் கொமர்ஸ் ஆகிய நிறுவன்ங்களின் ஒத்துழைப்புடன் 40க்கும் அதிகமான இந்திய நிறுவனங்கள் இந்த கண்காட்சிகளில் பங்கேற்கின்றன.

சர்வதேச தரத்துக்கான பொதியிடல் மற்றும் அச்சிடல் ஆகியவற்றின் முக்கியம் தொடர்பாக அமைச்சர் கௌரவ றிசாட் பதியுதீன் சுட்டிக்காட்டினார். குறிப்பாக உணவு மற்றும் குடிபானங்களுக்காக புதிய முறைகளை பயன்படுத்தி பொதியிடலை மேற்கொள்ளவேண்டுமென அவர் நிறுவனங்களை ஊக்குவித்திருந்தார். அத்துடன் பொதியிடல் தொழில்நுட்பத்தில் சூழலுக்கு உகந்த தெரிவுகளை பயன்படுத்தவேண்டுமெனவும் அவர் இங்கு குறிப்பிட்டிருந்தார். பெறுமதிசார் வலையமைப்புக்களை மேலும் பலப்படுத்துவதற்காக பல்வேறு நாடுகளிலும் சிறிய நடுத்தர தொழில் முனைவோருக்கிடையிலான சிறந்த ஒன்றிணைவினை உருவாக்கவேண்டுமெனவும் அவர் அழைப்பு விடுத்தார்.

அண்மைக்காலமாக இலங்கையில் நடைபெறும் கண்காட்சிகளில் அதிகளவான இந்திய நிறுவனங்கள் பங்கேற்பது குறித்து  தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியிருந்த இந்திய உயர் ஸ்தானிகர், அயல் என்பதற்காகவன்றி நெருங்கிய பிணைப்பே அதற்கான காரணம் எனவும் கூறியிருந்தார். சுத்தமானதும், பாதுகாப்பானதும் அதே நேரம் கவர்ச்சிகரமானதுமான பொதியிடலின் முக்கியத்துவம் குறித்து இங்கு குறிப்பிட்டிருந்த அவர் எமது சூழல் ஸ்திரத்தன்மைக்கு அது எவ்வாறான விளைவுகளை கொண்டிருக்கின்றது என்பது தொடர்பாகவும் கவனம் செலுத்தவேண்டிய தேவை இருப்பதனையும் சுட்டிக்காட்டினார். மேலும் பொதியிடல் தெரிவுகளுக்காக கடதாசி , துணி உள்ளிட்ட மாற்று மூலப்பொருட்கள் குறித்து ஆராய்தல் மற்றும் அடுத்துவரும் ஆண்டுகளில் ஒற்றைப்பாவனை பிளாஸ்டிக் பொருட்கள் பயன்படுத்துவதனை முடிவுக்கு கொண்டுவருதல் ஆகியவற்றுக்காக கௌரவ பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடி மேற்கொண்டிருந்த அழைப்பினை மேற்கோளிட்டு உயர் ஸ்தானிகர் குறிப்பிட்டிருந்தார்.

இந்த கண்காட்சி எதிர்வரும் 13 ஆம் திகதி, செப்டெம்பர் 2019 இல் நிறைவடைகிறது.
***************

கொழும்பு
11 செப்டெம்பர் 2019